



ஓலை 86 | ஓசை 209 | செப்டம்பர் 2024

# அகர முதல இலக்கியப் பேரவை



## கவிதை வார இதழ்

தமிழ்ப்பணியில்...

அகர முதல இலக்கியப் பேரவை [ ம ] சிவம் அறக்கட்டளை

# திருக்குறள்

## குறள்

மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாந்தந்
தகுதியான் வென்று விடல்

## பொருள்

மனச் செருக்கால் தீமை செய்தவரைப்
பொறுமையால் வென்றுவிடுக.

அகர முதல இலக்கியப் பேரவையில் இணைய
9597887847

அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

நிறுவனர்

**செல்வமுத்துகுமரன் குணசேகரசிவம்**

ஆசிரியர்கள்

**அ.வில்சன்**
**குமர.தர்மசீலன்**

வடிவமைப்பு

**ச.சூர்யா, அ.வில்சன்**

அலுவலக முகவரி


**97, குஞ்சிதபாதம் நகர்,**
**டவுன்ஸ்டேஷன் தென்புறம்,**
**மயிலாடுதுறை-609001.**


# அகர முதல இலக்கியப் பேரவை


Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

மரபு பா கற்போம்

வெளி(விருத்தம்)மண்டிலம்

# இல்லற மல்லது நல்லற மன்றும்




அங்கே பறவையோ வெண்டிய உயிரினம் - யாவுந்தா
உலகினில் உயிர்த்திடும் அஃறிணை உட்படவும் - யாவுந்தாம்;
நலமாய் வளமாய் இல்லற உறவுடனும் - யாவுந்தாம்;
நிலத்தினில் நல்லறத் துடன்வாழ வேண்டும் - யாவுந்தாம்!

இல்லற உறவுடன் வாழ்தலே நல்லறம் - நன்றன்றோ
நல்லற வாழ்வின்றி தனியாளாய் வாழ்தலும் - நன்றன்றோர்?
அல்லவை நல்லவை யாவும் அறிதலும் -நன்றன்றோ;
எல்லோரும் இல்லறம் இணைவதும் மகிழ்வதும் - நன்றன்றோர்!




விண்ணும் நிலவும் கதிரும் இணைந்தது -போன்றேதாம்;
மண்ணும் நீரும் உயிர்களும் இணைந்தது - போன்றேதாம்;
எண்ணும் எழுத்தும் இலக்கியத்தில் இணைந்தது - போன்றேதாம்;
மண்ணில் மாந்தர் இல்லறம் நல்லறம் - போன்றேதாம்!

**இலக்கணக் குறிப்பு:**
விருத்தம் என்னும் மண்டிலப் பா வகைகளில் வெளி விருத்தம் என்னும் வெளி மண்டிலம் ஆகும். மேலேயுள்ள பாடல்கள். இப் பாடல் ஐந்து சீர்கள் கொண்ட நெடிவடிப் பாடலாகும். இப் பாடல் நான்கடி அல்லது மூன்றடியும் பெற்று வரலாம். ஆனால், எல்லா அடியும் ஓரெதுகைப் பெற்று, ஒவ்வோரடியிலும் ஈற்றுச் சீரான ஐந்தாம் சீர் தனிச்சீர் பெற்று வரும். இத் தனிச்சீர் அடி தோறும் ஒரே சீரே வரும். அடி தோறும் நான்காம் சீரின் சொல் அல்லது ஈற்றெழுத்து ஒன்றி வருதல் சிறப்பாகும்.
பொழிப்பு மோனைப் பெற்றும் வரலாம். பெறாமலும் வரலாம்.
சீர்களில் ஈரசைச் சீர்களாக மூவசைச் சீர்களாகக் கலந்து வரலாம்.

நெருப்பலைப் பாவலர் இராம இளங்கோவன்

# வந்தனம் ஐயா வந்தனம்



வந்தனம் ஐயா, வந்தனம்
விக்னங்களை நீக்கும் கணபதிஐயா,
வந்தனம் ஐயா, வந்தனம்!

மாங்கனிக்கொண்டு வம்பிழுத்த நாரதருக்கு,
மாதாவும் பிதாவுமே உலகமென
மணமகிழ்ந்து சுற்றிவந்து மயில்வாகனைத்
தென்பழனி மலைக்கே கோபத்தோடு
துறவியாக்கி ஞானமளித்த கணபதிஐயா,
வந்தனம், உமக்கேயெந்தன் வந்தனம்.

குறமகளாம் வள்ளியைக் குமரனவன்
கைப்பிடிக்க தினைப்புலத்தில் கஜேந்திரனாய்க்
கைகொடுத்த தந்திமுக கணபதியே,
வந்தனம் ஐயா, வந்தனம்.

வந்தனம் ஐயா, வந்தனம்
வாழும் இந்த மனிதர்கள்
வாழ்வில் செய்த பாவங்கள்
வழங்கிடும் விதவிதமான சங்கடங்களை
வேரறுக்கும் சங்கடஹர சதுர்த்தி
விரதப் பலனை அளிப்பவனே
விநாயகனே கணநாதனே கணபதியே
வந்தனம் ஐயா, வந்தனம்.

கற்பக விநாயகராய்நீ கனிவுடன்
காட்சிதருவாய் பிள்ளையார் பட்டியிலே!
கால,சர்ப தோஷம்போக்கிடு வாயுந்தன்
காலினைக் கெட்டியாய்ப் பிடித்தவர்க்கே;
விநாயகர் சதுர்த்தி நாளிலே
விரும்பி வழிபடும் அடியார்க்கு
வேண்டுமருள் தந்திடுவீரே ஐயா;
வந்தனம் ஐயா, வந்தனம்
வாழ்வளிக்கும் கணபதியே வந்தனம்!

கவிஞர் தீந்தமிழ் திருமலைக்குமரன் அருணாச்சலம், கோவில்பட்டி

# முடிவில்

அத்தனை
ஆயுதங்களின்
அதிவேக
போராட்டத்தின்
முடிவில்

வெற்றி வாகை
சூடி
மத்தளமிடும்
கூக்குரல்களின்
மத்தியில்



சாம்பல் மேட்டில்
பூத்த
வெள்ளைப் பூ
ஒன்று
புன்னகைக்கிறது
ஆகச்சிறந்த
பொறுமையுடன்

கவிஞர் அன்னலட்சுமி சரவணன், ஈரோடு

# என்மறை நீயென

அன்பதை நாளுமே அள்ளியே தந்திடும்
    ஆருயிர் நெஞ்சமே அரண்தரும் சொந்தமே
இன்பமே இன்பமே இவனதன் நிழலிலே
    இருப்பதும் கிடப்பதும் ஈடிலா சுகந்தமே
உன்முகம் என்றுமே உவகையைக் கூட்டுமே
    உள்ளமும் பொலிவினை ஊற்றெனச் சேர்க்குமே
என்மறை நீயென ஏட்டிலே எழுதவா
    இனியவன் குணங்களை எடுத்துதான் காட்டவா

சொல்லிலே அடங்குமா தூயவன் சிறப்புதான்
    சொக்கனும் ஏங்குவான் தொடர்பினை வளர்க்கவே
மல்லிகை பூவென மலருவேன் நானுமே
    மனமதை படித்திடும் மன்னவன் சங்கரன்
சில்லென பார்வையில் சிலையென மாறுவேன்
    தீண்டிடும் நேசமோ சீர்தரும் காதலை
மெல்லிய நாணமும் மேலிடும் நெருங்கையில்
    மீண்டிடா வகையிலே மீட்டிடும் வாழ்வுமே



கவிஞர் பூர்ணிமா சங்கர், கோயம்புத்தூர்

# அன்னை தெரேசா

கருவுறாது கருணையுற்றதால் காலத்தையே
காலடியில் பிறக்க வைக்கிறாள்
அன்பின் தாய்ப்பால் கொடுத்து
அகிலத்தை ஆளாக்குகிறாள்
மனிதநேய மகத்துவத்தால்
மதங்களை இணைக்கிறாள்
இன்முகத்தின் பரிசத்தில்
இதயங்களை இசைக்கிறாள் புன்னகையால்
அகிலத்தின் புண்களைப் பொசுக்குகிறாள்
இல்லையென்காது; இருப்பதில் வாழ்விக்கிறாள்
நேசத்தால் நோய்களை நீக்குகிறாள்
பாசத்தால் நெஞ்சங்களில் பந்தமாகிறாள்
கரங்களால் புனிதத்தை காத்திருக்கிறாள்
மௌன யாகத்தில் உலகை பேச வைக்கிறாள்
வெள்ளுடையில் சமாதானத்தை அடைகாக்கிறாள்
நல்லனவற்றுள் நின்று நன்மை நவில்கிறாள்
அனாதை இல்லாத அகிலத்தைப் பிரசவிக்கிறாள்
தளிர்களை தவிப்பில் வாட்டாது
தலை தூக்கி துளிர்க்க வைக்கிறாள்
இறப்பின் தேதியை இவள் மட்டுமே தள்ளி வைக்கிறாள்
பிறப்பின் பெருமையை சொல்லி வைக்கிறாள்
மன்னிக்க முடியாத
மனித நீசத்தனங்களுக்கு புள்ளி வைக்கிறாள்
உலகைத் தீண்டா வகையில்
தீமையைத் தள்ளி வைக்கிறாள்
நேயத்தை தேசிய கீதமாய் புள்ளி வைக்கிறாள்
எல்லோர் கரத்திலும் கருணை மொழியை எழுத வைக்கிறாள்
பெண்மையின் மென்மையில் உலகைத் தாங்குகிறாள்
வீரத்தின் மாண்பில் உலக இழிவுகளைப் போக்குகிறாள்
கடவுளின் கனவை செயலாக்கி வைக்கிறாள்
அன்னையெனும் சொல்லுக்கு அகராதி ஆகிறாள்
இன்னல் தாங்கி இதயம் முழுக்க
புன்னகைத் தழும்புகளால் பூமியைக் காக்கிறாள்
மாசற்ற மழலையை மாண்புறக் காக்கிறாள்
மடமையின் கொடுமையில் மண்ணில் விழுவதை
மணக்க வைக்கிறாள்



பாச ஊற்றைப் பிரசவித்து பாவமேனியை நீராட்டுகிறாள்
நேசக்கரத்தை நீட்டி நெஞ்சங்களை சீராட்டுகிறாள்
அன்பின் கதிர்களால் மனங்களைப் பாராட்டுகிறாள்
அறிவின் துணைக்கொண்டு
இதய தீபங்களை ஏற்றி வைக்கிறாள்
யார் சொன்னது அன்னை இறந்துவிட்டாள் என்று ?
இறப்பைத் தாலாட்ட
சொர்க்கம் சென்றிருக்கிறாள் அன்னை.

கவிஞர் இளையவன் சிவா, நரசிங்காபுரம்

# பிடி சோறு



உயிரைப் பேணிட
உடலினை ஓம்பிடு.
உடம்பை வளர்த்தேன்
உயிர் வளர்த்தேனே

திருமூலரின் வாக்கு
திருமந்திரம் வழியில்.
அறிவினைப் பெருக்கி
ஆற்றலைப் பெறுவது

உடலின் பசியினை
உடனே அகற்றிடவே.
யாவர்க்கும் வேண்டுமே
யாண்டும் ஒருபிடிசோறு.

பசிவந்திடப் பற்றது
பறந்து போகும்.
பசித்தோர்க்கு உணவிடலே
புண்ணியம் என்பர்.

கொடையில் சிறந்த
கொடை உணவீதலே.
பசித்தோர்க்கு உணவு
புசித்திட அளித்தல்.

பசியோ சுவையறியாது
பசிப்பிணி வந்திட
மெய்யது சோரும்
கண்கள் பொலிவிழக்க

மயக்கம் வந்தே
நலிவை உண்டாக்கும்.
தமிழரின் பண்பே
விருந்து ஓம்பல்.

ஆக்கத்தின் பயனே
அறவழி நடத்தல்.
விருந்து ஓம்பிடவே
வேளாண்மை செய்தல்.

சிற்றுயிர்க்கும் உணவு
காகத்திற்குப் படையல்.
வயிறோ ஒருநாள்
உணவையே ஏலும்.

இருநாள் உணவை
இருத்திடாது நாளும்.
அவ்வையோ இடும்பைகூர்
வயிறு என்றார்.

வள்ளலார் அளித்தார்
வருவோர்க்கு உணவை
உணவின்றேல் உலகே
அழிந்தே போகும்.

உழவின்றேல் உணவோ
உயிர்கட்குக் கிட்டாது.
பிடிசோறை வீணாக்காது
பசித்தோர்க்கு ஈவோம்.

இருப்பதைப் பகிர்ந்தே
இன்முகத்தோடு உண்போம்.

கவிஞர் செ.கலைவாணி, மேட்டூர் அணை

# பூமிக்கு வேறெங்கும் கிளைகள் இல்லை

அன்னையின் மடியில் அணுவை வைத்து
என்னையும் உன்னையும் ஏன்அவன் படைத்தான்.
தென்னையும் புன்னையும் தென்றலை வீசத்
தீரா வெம்மையைத் தீண்டிக் கழித்தான்

நன்னீர் வளங்கள் நம்மைச் சூழ
நதியும் ஊற்றும் நயம்படச் செய்தான்
அன்னமும் அன்றிலும் ஆடும் மயிலும்
அடைக்கலம் கொள்ள வனத்தைப் படைத்தான்



குன்றில் தாவும் குரங்கும் மானும்
கூட்டமாய் வாழும் அறிவைக் கொடுத்தான்
பன்னிரு மாதப் பருவம் அனைத்தும்
பயிர்கள் சுழலும் படிப்பினை தந்தான்

எல்லாம் படைத்த இறைவன் - ஏனோ
அறியாமல் செய்த பிழையோ - இவன் ?
வன்முறை பெயரில் வளங்களை அழித்தான்
வாழ்வியல் முறைக்கு வஞ்சகம் செய்தான்

உண்ணும் உணவில் நஞ்சை கலந்தான்
உழவின் மகிமை உணராது இருந்தான்
எண்ணம் போல வாழ்வதற்காக
இன்னொருக் கோளை இடையூறு செய்வதா?

மண்ணைக் குடைந்து மலையைச் சரித்து -மீண்டும்
மாற்றுக் கிரகத்தில் மனிதக் குரங்கா ?
அந்நியக் கோள்கள் யாவையும் இங்கே
அண்ணாந்து பார்த்தே அனுதினம் ரசிப்போம்

புண்ணியக் கோளாம் பூமிக்கு நிகராய்
விண்ணில் வேறெங்கும் கிளைகள் இல்லை.

கவிஞர் திருமதி கவிதா சீனிவாசன்

# மனம் ஒரு குதிரை

மனம் ஒரு குதிரையே!
அடங்கா குதிரை அது!
சேணம் பூட்டா பறக்கும் குதிரை!
மனதை அடக்கினவனே மா வீரன்!
மத யானையே மனம்!
மதியால் வெல்பவனே மா சூரன்!
அவனே மாநிலம் போற்றும் மா தவன்!
மெய்யை அறிந்தவன்.
உயர்வு, தாழ்வு இல்லை அவனுக்கு.
இன்பம், துன்பம் ஏதுமில்லை அவனுக்கு.
சிறுமை, பெருமை அவன் அறியான்.
போக்கும் ;வரவும்
அற்ற சச்சிதானந்தம் அவனே!
சித்தம் அடங்கிய சின்மயம்.
பார் ஏற்றித் தேடும்
பரம் பொருளும் அவனேதான்.



கவிஞர் சசிகலா விஸ்வநாதன்

# நல்லுலகு நமக்கானதே

எங்கு காணினும்
இயற்கையின் மகிமை
இங்கு இசைந்திடும்
தென்றலின் உரசல்கள்.

அன்பின் வசியத்தில்
அன்பனுக்கும் நண்பனுக்கும்
அள்ளி விதைத்திடுவோம்
அருஞ்சொல் கோர்த்திடுவோம்.



ஏழுலகும் சென்றே
ஏங்கும் செல்வம் சேர்ப்போம்
போர்முரசின்றி
போற்றும் உலகம் செய்வோம்.

தூசு தட்டி
தூய்மையை வரவேற்போம்
துள்ளல் நடையில்
பள்ளிப் பாடங்கள் இணைப்போம்.

சாதனைகள் புரிந்தே
வேதனைகளை வீழ்த்துவோம்
போதனைகளில் என்றும்
இனிமைகளை இழைத்திடுவோம்.

ஆற்றலும் போற்றலும்
ஆணித்தரமாய் கொள்வோம்
நாம் வாழும்
நல்லுலகம் நமக்கானதே.

கவிஞர் இராஜகை நிலவன், மும்பை

# சில புதினங்கள் பல அனுபவங்கள்

சில விழுங்கக் கூடியவை
சில அசைபோடக் கூடியவை
சில பலமுறை படிக்க தூண்டும்
சிலவற்றை பலமுறை படிக்க வேண்டும்

சில உயிராக உடன் வரும்
சில உணர்வாக துடிக்க விடும்
சில சிலிர்ப்பூட்டும்
சில வேறு உலகத்திற்கு கூட்டிச் செல்லும்

சில உயிரை உலுக்கி போடும்
சில உங்களை பிய்த்துப் போடும்
சில மரண அவஸ்தை தரும்
சில மறுபிறப்பு வரை கூட்டிச் செல்லும்

சில அடுத்தவன் வாழ்க்கையை வாழச் சொல்லும்
சில இதயத்தை கிழித்து கூறு போடும்
சில இடக்கு பேசும்
சில வாழ்க்கை முழுதும் உடன் வரும்



மன்னராக வாழ்ந்ததுண்டா?
துரோகங்கள் கிழித்ததுண்டா?
காயத்திற்கு மருந்திட்டதுண்டா?
துணைக்கு வந்ததுண்டா?

எளிய மனிதர்களின் இதயம் புரிந்ததுண்டா?
ஏழைகளின் வலி அறிந்ததுண்டா?
ஏனிந்தப் பிறவி நொந்ததுண்டா?
மீண்டு விட முடியும் நம்பிக்கை கொண்டதுண்டா?

இதுவத்தனையும் புதினம் செய்யும்
உங்களைப் புடம் போடும்
உங்களை சலவை செய்யும்
உங்கள் மனசாட்சியை உலுக்கும்

இதுவரை இல்லையா இவ்வனுபவம்?
இனியும் புகப் போவதில்லையா சொர்க்கம்?
இரங்கற்பா வாசிப்பதை தவிர வேறு வழியில்லை
வாசியுங்கள்! ஒருவேளை மூன்றாவது நாள் உயிர்த்தெழக்கூடும்

கவிஞர் முனைவர் கதிர்வேல் தனியரசு, திருச்சி

# மன்னரைச் சேர்ந்தொழுகல்

## அதிகாரம் : 70



மன்னரைச் சேர்ந்தொழுகல்

வலியுடைய வேந்தனைச்
சேர்ந்தொழுகி வாழ்வோர்.
நெருப்பில் குளிர்காய்வார்போல்
ஒட்டியொட்டாமல் வாழல்நலம்.

கோவிரும்பு மொன்றை
தாம்விரும்பிடா திருத்தலே.
சார்ந்திருப்போர்க்கு அக்கோவினால்
நிலையாக்கம் பெற்றுத்தரும்.

அமைச்சு தற்காத்துக்கொள்ள
அரியதவறு தவிர்த்தல்நலம்.
ஐயுற்று சினங்கொள்ளுமரசை
தெளிவித்தல் எவர்க்குமரிது.

பெரியோர் அவையிருக்க
அருகிருப்போர் காதோடுகாதுவைத்து.
நெருங்கிப்பேசி நகைத்தல்
இல்லாது ஒழுகல்நலம்.

மன்னன்வாய் மறைபொருள்
உற்றுக்கேளாமலும் வினவாமலுமிருந்து.
அவரே அப்பொருளுரைக்கையில்
முற்றும் கேட்டறிதல்நலம்.

மன்னனின் மனக்குறிப்பறிந்து
மதிப்புடைய காலங்கருதி.
வெறுப்பில்லா விரும்பத்தக்கதை
கோவிரும்பக் கூறல்நலம்.

மன்னனின் விருப்பமட்டிலும்
சொல்லில் பயனிலாச்சொல்லை.
அவர்விரும்பிக் கேட்டபொழுதும்
சொல்லாதிருத்தல் நலம்.

இளையோர் என்றோ
இன்னமுறை என்றோ.
இகழாமல் கோநிலைக்கேற்ப
புகழ்பொருந்த நடத்தல்நலம்.

அசைவிலா தெள்ளறிவுடையோர்
அரசால் விரும்பத்தக்கதெனக்கருதி.
அவர்விரும்பா செயல்களை
ஒருபோதும் செய்யார்.

அரசர்க்கு அதிநெருங்கியோராய்
தம்மைக்கருதி தகுதியில்லாத.
அறமிலாச்செயல் புரிதலஃதே
அவனுக்குக் கேடுதரும்.

கவிஞர் ஆன்றனி ஜமுனா, நாகர்கோவில்

# மணிமேகலை

## (இருபத்தி ஆறு)

25. ஆபுத்திரனோடு மணிபல்லவம் அடைந்த காதை. (பாகம்-இரண்டு)

"பெருமழை பெய்தது நான் அம்பலத்தில் இருந்தேன்
கருமமே கண்ணாக வாழும் மக்கள் அம்பலம் வந்தனர்
அருகில் இருந்த என்னிடம் கடும் பசி ,உணவு கேட்டனர்
தருவதற்கு உணவேதும் இல்லை வருந்தினேன் அழுதேன்"

"ஏடா, நாடே வறுமையுற்றாலும் இந்த ஓடு வறுமையுறாது
கூடவே வைத்துக்கொள் எடுக்க எடுக்க உணவு குறையாது
கூடுபோல் இருக்கும் இது அமுதசுரபி எனும் பாத்திரம்"
தேடினாலும் கிடைக்காது வரமாக வந்தது ஆபுத்திரனிடம்

வழி தவறிப் போனவன் வையகத்தை வாழ்விக்க வந்தவன்
பழிச்சொல்லுக்கு ஆளாகாமல் அறம் காத்த மன்னன் அவன்
விழித்துக் கொண்டவன் கையில் கிடைத்தது அமுதசுரபி
பழம் பிறப்பை அறிவதற்கே அவனை அழைத்து வந்தாள்



ஆபுத்திரன் புத்த பீடிகை வலம் வந்து முற்பிறவி உணர்ந்தான்
''சோ''வென மழை, வீசிய புயல் காற்றில் கடல் கொந்தளித்தது
காகந்தி நகரம் வந்த மரக்கலங்கள் உடைந்து கரை சேர்ந்தன.
மாநகர் புகார் கடல் கொண்டதின் காரணத்தை அறிந்தான்.
(காகந்தி : காவிரிப்பூம்பட்டிணம் )

நாக நாட்டை ஆண்டுவந்த மன்னன் செல்ல மகள் பீலிவளை
சோகமாக தன் குழந்தையை வணிகனிடம் ஒப்படைத்தாள்
வேகமாக பயணித்த கலம் கார் இருளில் கடலில் மூழ்கியது
வாரிசை இழந்த நெடுமுடிக்கிள்ளி மறந்தான் இந்திர விழா.
தார்மீக மணிமேகலா தெய்வத்தின் சீற்றமே இந்த அழிவு ,.

இட்டனள் சாபம், "அணிநகர் தன்னை அலைகடல் கொள்க"
பட்டது போதும் மன்னன் நாட்டை விட்டு வெளியேறினான்
சட்டென மாதவியும் சுதமதியும் வஞ்சி மா நகர் சென்றனர்
கட்டழகி மணிமேகலை, அறவண அடிகள் வஞ்சி வந்தனர்

உனக்கு இனி எல்லாம் நலனே அறம் செய்து வாழ்வாயாக
தனக்காக வாழாமல் பிறருக்காக வாழ் "மணிமேகலை.
மனதில் கொள் அறம் எனப்படுவது யாதெனின் ,பசிக்கு உணவு
தினம் இருக்க வீடு, உடுக்க துணி கொடு ,நீடு வாழலாம்"
( மணிமேகலை புண்ணியராசனிடம் ,கூறியது ).

தொடரும்...

( இரண்டாம் பாகம் முற்றும் )

கவிஞர் ந. திருக்காமு

# பெருஞ்சாப அனுக்கம்

இடைவெளிகளால்
பிரிவுகள் நிகழ்வதில்லை

அவை நெருக்கத்தின்
நிரந்தர தூதுவர்கள்

மலை போல நின்று
மகாபிரிவைத் தோற்றுவிப்பது
மௌனம் மட்டுமே

என்னவென்று அறியாத
இன்னதென்று உணராத
யாதென்ற தெரியாத
எத்தனையோ வினாக்கள்
எத்தனையோ மர்மங்கள்
எத்தனையோ அலட்சியங்கள்
எத்தனையோ நிராகரிப்புகள்
அடங்கியதுதான் மௌனம்
அது
பிரிவின் திறப்பு
பெருஞ்சாபத்தின்
அனுக்கம்
பெருங்கோபத்தின்
மறுவுரு



கவிஞர் மரு ஜலீலா முஸம்மில், ஏறாவூர் (இலங்கை)

# குயவன்

குடும்பத்துக்காக வெயிலிலும் மழையிலும் உழைப்பவன்
வியர்வை சிந்தினாலும் அயராது சிந்திப்பவன்
ஏழையானாலும் யாரிடமும் கேட்க மாட்டான்
ஓட்டை வீடாயினும் மகிழ்ச்சியாக வாழ்பவன்
கைகள் இரண்டும் காய்த்துப் போனவன்
கூழாயினும் குடும்பத்தோடு உண்டு மகிழ்பவன்
சுமைகளை எல்லாம் சுகமாக சுமப்பவன்
வெள்ளை உள்ளம் கொண்டு பழகுபவன்
சுருங்கிய வயிற்றோடு சுற்றி திரிபவன்
பாதி நேரம் பட்டினியால் வாழ்பவன்
மனைவியே தெய்வம் என்று நினைப்பவன்
ஓய்வு இல்லாமல் உழைத்துக் காட்டியவன்
வேதனைகள் யாவற்றையும் சுமந்து நிற்பவன்
யாரிடமும் எதையும் எப்போதும் பகிராதவன்
தீர்வுகளுக்கு எல்லாம் முடிவு காண்பவன்
ஏழையாயினும் இரக்க உணர்வு கொண்டவன்
இருட்டிலும் வெளிச்சத்தை எப்போதும் பார்க்காதவன்
நாகரீகம் மாற காணாமல் போனாதா
வாழ்வு கொடுப்போம் மண்பாண்ட கலைஞனுக்கு
தமிழக அரசும் நிதி உதவி செய்து
இவர்களது வாழ்க்கையும் மணம் வீசட்டும்



கவிஞர் ம. செ. அ. பாமிலா பேகம், நாகர்கோவில்

# கார்முகிலாய் கவின் தமிழ் விளைவிப்போம்

சந்தங்களைச் சதாநாளும்
சேர்ந்துகூடிச் சொந்தமாக்குவோம்!
சிதறுண்ட சொந்தமெல்லாம்
சீர்கவியால் ஒன்றாக்குவோம்!
சிரஞ்சீவியாய் சரஸ்வதியை
சிந்தைநிதம் இருத்துவோம்!
சந்ததிகள் சேர்ந்துபாடச்
சபைகளை நிறுவுவோம்!
மந்தமதியில் மனதைவதைக்கும்
மகாபேதைகளையும் மாற்றுவோம்!
மண்ணின்மிசை முத்தமிழினிசை
மேலோங்க முழங்குவோம்!
***

அகத்திய மாமுனியின்
அகத்தியம் கற்போம்!
அகத்தினிலே ஆதித்தமிழை
அழகாய் அமர்த்துவோம்!
இகத்தினிலே பொதிகைத்தமிழை
எங்கும் பரப்புவோம்!
உகந்தஞான சீலபூட்கை
உணர்த்தி உயருவோம்!
ஊற்றுநதியாம் உயர்தமிழை
ஓங்கவே செய்வோம்!
அகந்தையடங்க அருமைநூல்கள்
அகழ்ந்தே பயிலுவோம்!
அகிலத்திலே மூத்தமொழியை
அணங்காகவே வணங்குவோம்!
***

தொல்காப்பியர் தொட்டதுறையைத்
துலங்கவே வைப்போம்!
கல்வியுயர் புலமைஞானம்
கடற்பனுவலதில் காண்போம்!
காத்திரமாய் ஐந்திலக்கணம்
காசினியோர்க்கு மொழிவோம்!
பல்புலமைப் பவனந்தியின்
பனுவலுமே படிப்போம்!
பற்பலவாம் இலக்கணநூல்
பழரசமாய்ச் சுவைப்போம்!
நல்லைநகர் நாவலரின்
நற்றமிழும் கற்போம்!
***

எட்டுத்தொகையும் பத்துப்பாட்டும்
இதயாசனம் ஏற்றுவோம்!
இதனையடுத்த கீழ்க்கணக்கும்
இமயமென்றே எண்ணுவோம்!
பட்டிதொட்டி எங்கிலுமே
பழந்தமிழைப் போற்றுவோம்!
பான்மையுடன் பண்பாட்டை
பெருமைபெறப் பேசுவோம்!
மெட்டுடனே பாட்டெழுதி
முத்தமிழைப் பாடுவோம்!
மெல்லத்தமிழ் சாகுமென்ற
மூடத்தனத்தைச் சாடுவோம்!
கொட்டுகின்ற அருவியதாய்
கொஞ்சுதமிழில் விஞ்சுவோம்!
கார்முகிலாய் மொழிவிளை(வி)த்து
காலமெல்லாம் வெல்லுவோம்!




கவிஞர் விவேகவெளி தமிழேந்திரன், வெல்லபதியான்(இலங்கை)

# தேனினும் இனியது காதல்

மான்விழிகளில் மருட்சி
இதயத்தில் மகிழ்ச்சி

பார்வையில் வீழ்ச்சி
எனக்குள் நெகிழ்ச்சி

அனலானது தேகம்
அணைத்திடத் தீரும்

உருகினேன் உனக்காக
மெழுகானது மனது

உயிரின் தீண்டலில்
உனதானேன் நானே

உறவாகிடு சொந்தமே
பிரியாது பந்தமே

தேனினும் இனியது
காதல் என்பேன்

மதுரசக் கிண்ணங்கள்
மங்கையுனது வண்ணங்கள்

தித்திக்கும் அமுதமே
திகட்டவில்லை குமுதமே



நெஞ்சமதில் துடிப்பு
விழிகளில் கனிவு

எந்நாளும் உனது
நிழலாகித் தொடர்வேன்

அன்பான உள்ளமதில்
இல்லையது கள்ளமே

இளமை நாயகியே
இணைந்திடு பாவையே

எழிலான தேவதையே
மயக்கினாய் என்னையே

கிளிப்பேச்சில் கிள்ளையாகி
ஆனந்தித்தேன் ஆரணங்கே

மங்கையின் முகமதைக்
காணுகையில் பரவசமே

கவிஞர் பெ. வெங்கட லட்சுமி காந்தன், விருதுநகர்

சூடம் காட்டி
பிரசாதம் கொடுக்க
என் வீட்டைக் கடந்து விட்டது
தேர்.
தெருவாசலில்
இன்னமும் காத்திருக்கிறேன்.
தேவதை
உன் தரிசனத்திற்காக!
/
நீயும்
தொலைந்து விட்டாய்.
நானும்
தொலைந்து போனேன்.
நம்மை
யார்தான் கண்டெடுப்பார்.
/
மரக்கன்றொன்றை
நடுகிறேன்.
நாளை என் மகனும்
அவன் பிள்ளைகளும்
மகிழ்வுடன் கேட்டு மகிழலாம்
இனிமையான குயில் பாட்டு.



கவிஞர் பாரியன்பன் நாகராஜன், குடியாத்தம்

# இன்னல் தந்து நிற்க

அகம் அறுந்து அமைதி இழந்து
அல்லல் தீண்டும் அந்திப்பொழுதில்
ஆற்றுப்படுத்த ஆளில்லாமல்
ஆய் மக்கள் காத்திருக்க.

தலைவன் இல்லா நிலத்தில்
திக்கற்று நாள்கள் நகர்த்தும்
தென்னவள் சேய்.

இறுக்கம் தளர்த்தும் இயற்கை
இல்லாமை அகற்ற மனமில்லாமல்
இன்னல் தந்து நிற்க.



கவிஞர் செ. தமிழ்நேயன், தமிழ் நாடு

# விழலுக்கு இறைத்த நீராய்!



வாழ்க்கைப் பயணத்தில்
வாழ்ந்திடும் போது
போதைக் கடிமையாகி
பேதையாய் அலைவர்.

குடிப்பழக்கம் குடியைக்
கெடுக்கும் என்பதோ
மதுபாட்டிலில் குறிப்பாய்.
மயக்கத்தில் குடித்தல்.

தரையில் வீழ்ந்தே
தன்னை மறப்பர்.
விடியலில் எழுந்ததும்
வலியில் முனகுதல்.

விழலுக்கு இறைத்தநீர்
வீணாவ தன்ன
யாவும் பயனற்று
யாவரையும் வருத்தும்.

மண்மலடாகும் நெகிழி
வேண்டா மெனக்கூறல்.
துணிப்பை மறந்தே
துணிவோடு சென்று

நெகிழியில் காயடைத்து
நிலைமை மறத்தல்.
பயனற்ற நெகிழிப்
பையோ பாதையில்.

சாலைக் கழிவோடு
சாலையில் புரளல்.
அலைபேசி விளையாட்டு
அழிக்குது புத்துணர்ச்சியை.

மூளை யாற்றலோ
முடங்கிய நிலையில்.
சிறார்க் கூட்டம்
சின்னாப் பின்னமாய்.

கூடி விளையாடாது
கூனிக்குறுகி மூலையில்.
தலைமுறை காத்திடத்
துடித்தே முழக்கம்.

விழலுக் கிறைத்தநீராய்
வீணாகிப் போச்சுதே.

*கவிஞர் செ. கலைவாணி, மேட்டூர் அணை*

# தாயற்ற பிள்ளையாய்

நிம்மதி என்றேன் இன்று
நித்திரை இழந்தேன்

உல்லாச உணவுண்பேன்
என்றேன் உணவிடுதியில்
உணவருந்தாமல் உன்னைத்
தேடி தவிக்கிறேன்



நீயற்ற வீடு
நிலவில்லா வானமாக
நீயற்ற நாட்கள்
ஒளியில்லா ரவியாக

கோலமயிலே நீ
கோலமிட்ட வாசல்
வெற்றிடமாயிருக்க

அலைபேசியில் நீ
அழைக்கும் நேரமும்
அநாதையாய் இருக்கிறேன்
என்பதை அறிவிக்காமல்
மறைக்கிறேன் அகங்காரத்தில்

உண்மையில்
தனிமையின் நண்பனாய்
தாய் வீடு சென்ற என்
தங்க நிலா உனக்காக
காத்திருக்கிறேன்
தாயற்ற பிள்ளையாய்

கவிஞர் குட்டிமா தேவி ஸ்ரீ, விருதுநகர்

# அலைபேசி

இன்றைய பயணங்கள் அலைபேசியின் மடியில்
குறைபிரசவமாய்

எழுதுகோல் பிடித்த கைகளில் கைப்பேசியின்
அடையாளம் ஆறாத புண்களாய்

சவப்பெட்டிகள் சட்டைப்பையில்
பல வண்ணங்களில் பத்திரமாய்

இணையத்தின் இதழ்களில்
கைப்பேசியின் எச்சில் அசிங்கமாய்

விரல்களின் நுனிகளில் அலைபேசியின்
எழுத்துக்கள் எழுத்துப்பிழைகளாய்



எங்கெங்கு காணினும்
அலைபேசியின் தனிக்குடித்தனம்
கையடக்க கருவியில் காணமல்
போனது மனிதம்

கவிஞர் ரா. பிரேம் சுரேஷ், கோத்தகிரி

# சிரிப்பின் சிறப்பு

## சிரிப்பூ

சிரிப்பு மனிதருக்கு
மட்டுமே கடவுள்கொடுத்த நன்கொடை..
சிறப்பு எதுவென்றால்
மனிதனின் சிரிப்பு(பூ)
கவலை துக்கம்
கஷ்டம் பிரச்சனை
அனைத்தும் உள்ளடக்கியது
சிரிப்பூ.

வேதனையும் கவலையும் மனதில் இருந்தாலும்
அதை மறைக்க தெரிந்த மர்ம பொருள் சிரிப்பூ
சிரிப்பு நம்மை காப்பாற்றும்
ஆயுதமாக கடவுள்
நமக்கு கொடுத்திருக்கிறார்.
அதை அதிகமாக
பயன்படுத்தி உன்னை
நீ தற்காத்துக் கொள்!
உன் புத்தகத்தை
நீ மட்டுமே படிக்க முடியும்
சிரிப்பை வைத்து அடுத்தவர்களுக்கு
புரியாத புதிராக இருக்க முடியும்!
இப்படி ஒரு பொக்கிஷத்தை கொடுத்த
கடவுளுக்கு நன்றி!



கவிஞர் ஜெ. தேவிராஜசேகர், சென்னை

# புகைப்படம்

கடந்து விட்ட பசுமை நினைவுகளை
உள்ளத்தில் மூழ்கி முக்கி எடுத்து
இன்பமோ துன்பமோ நடந்த தென்னவோ
இதயத்தில் அழகாய் பரவச் செய்திடும்

பிறப்பு முதலாய் வளரும் காலமெல்லாம்
சிறப்பாய் வலம்வரும் சின்னஞ்சிறு நிகழ்வுகளும்
பொறுப்பாய் பதிந்து புதுமை தந்தே
வெறுக்கும் மனதையும் வென்று காட்டிடும்

கூடிக் குலாவிக் குதூகலித்த பொழுதுகள்
பாடித் திரிந்த பரவச நாட்கள்
கண்முன் விரிந்து ஆனந்தம் தந்திட
அவனியே கைக்குள் அடங்கி ஒடுங்கிடும்



சிலபோது கண்கள் இரண்டும் பனிக்க
அழுகையோ நெஞ்சிலிருந்து பீறிட்டெழுந்திட
உடம்பு சிலிர்த்து உணர்வுகள் புடைக்க
எண்ணங்கள் குவிந்து முள்ளாய்க் குத்திடும்

தனிமை போக்கித் தரணியில் மகிழவும்
தொலைந்த கனவுகளை மீட்டிப் பார்க்கவும்
நிதர்சனம் காட்டி நிலையாய் நிற்கும்
புகைப்படங்கள் என்றும் தன்னிகர் அற்றவை

கவிஞர் மாஹிரா ஹமீட் அஸ்ஹர், இலங்கை

# தாய்த் தமிழுக்கோர் தாலாட்டு

(தமிழைக் குழந்தையாக பாவித்துப் படிக்கவும்.)



உயிரே, மெய்யே
உள்ளமெல்லாம்
நிறைந்த எழிலே
கட்டிக் கரும்பே
கனியிடையிட்ட சாறே
கண்மணியே உனக்கு

சங்க நூல்களில்
பாட்டெடுத்து
சந்தம் மாறாமல்
சொல்லெடுத்து
பேறாகப் பெற்ற
பிள்ளைக் கனியமுதிற்குப்
பாடிடுவேன் தாலாட்டு

ஆற்றுப் படையிலே
அழகான சொல்லெடுத்து
தேற்றுகிறேன் உன்னைத்
தேன் மொழியே கண்ணுறங்கு

நற்கணக்கிலே சிலம்பு செய்து
பொற்பாதங்களுக்குப் பூட்டிடுவேன்
நறவமே நறுங்கனியே
உறவாக நானிருப்பேன்
கண்ணுறங்கு

எட்டுத்தொகை நூலெடுத்து
பட்டுத் துணியும் நெய்திடுவேன்
நட்டு வைத்த பசுந்தளிரே
நாளும் செழித்து வளர்வாயோ

நெஞ்சமெல்லாம் நிறைந்த தமிழே
துஞ்சாமல் நீயும் இருப்பதென்ன
அகநானூற்றுக் காவியமே
புறநானூற்று ஓவியமே
பூந்தளிரே கண்ணுறங்கு

அழகே, அமுதே
விழியே, மொழியே
திகட்டாத தெள்ளமுதே
குழந்தைத் தமிழே
கண்ணுறங்கு

கவிஞர் விஜயலக்ஷ்மி காளிதாசன், கோவை மாவட்டம்

# இனிதென இயற்கை

ஆசைகள் பல மனதை ஆர்ப்பரித்திட
நிறைவேறாமல் இன்னும்
நினைவினில் இருக்கும் என் ஆசைகளில் ஒன்று
இயற்கையோடு ஒரு நாளேனும் கழியாதா என்பதே
அழகாய் மிளிரும் இயற்கையை இரசித்து
தனிமையில் என் பயணம் அமைய வேண்டுமே
ஓர் இடத்தில் தேங்கியே நிற்காமல்
எங்கும் ஓடும் கடல் போல எங்கும் உலாவியபடி
தனிமையே மனக்காயங்களுக்கு
மருந்தென நம்புகிறது என் மனது
என் துயரங்கள் எல்லாவற்றையும் தொலைத்து
குழந்தையாய் மாறி குதூகளிக்க விரும்புகிறேன்
நானும் என் தனிமையும் எண்ணற்ற
மகிழ்ச்சியின் வெள்ளத்தில்
தத்தளித்து மனம் குளிர்ந்திட
ஆசையோ ஆசை
என்னை குறை சொல்லவோ, தூற்றவோ
பிடித்ததை செய்யவிடாமல் தடுக்கவோ
யாருமில்லை என் அருகில்
எனக்கான வாழ்க்கையை எனக்கு
பிடித்தது போல் வாழ்ந்திட
நான் மட்டும் போதுமே இத்தருணத்தில்
ஆனால் இன்னும் எத்தனை காலம்
இதற்காய் காத்திருக்க வேண்டுமோ
அதுதான் இன்னும் தெரியவில்லை
ஆசைகள் ஆசைகளாக மட்டுமே
நெஞ்சில் நிற்கின்றன
நானும் நிறைவேறும் நாளுக்காய் காத்திருக்கிறேன்
பிடித்தது போல் ஒரு முறையாவது வாழ்ந்து பார்த்திட
பிடிவாதமாய் இருக்கும் மனதுடன்



கவிஞர் சியானா றிஸ்மி, புத்தளம் (இலங்கை)

# விலகியபடியே

சாலையோரக்
காட்சிகளைப் போல
கண்டு இரசிக்கும்
எதனையும்
கடந்து செல்லப் பழகுங்கள்
கொஞ்சம் புன்னகையுடன்
விலகியபடியே.



கவிஞர் கீர்த்தனா பு, திருப்பூர் மாவட்டம்

# கரையாத கல்வி

கல்வியெனும் கடலிலே
மூழ்கிய அறிஞர்கள் பல.

கற்றவை ஆயிரம்
தொட்டது தொலைவிடம்.



கேழ்வியை வளர்த்திட
கேள்விகள் எழுப்பிடு.

ஞாயிறாய் ஒளிர்ந்திட
நூல்களை நாடிடு.

ஞானத்தால் வந்ததோ
காலத்தால் வந்ததோ.

அனுபவம் ஈந்ததோ
அறிவினில் புகுந்ததோ.

அணுவிலும் அசைவிலும்
அறிவினுக்கு தஞ்சம்.

அனைத்தையும் உணர்ந்திட்டால்
இல்லை ஒருபஞ்சம்.

காற்றில் கரைந்திட
கல்வியென்ன கற்பூரமா?.

கற்றுக் கொண்டிருந்தால்
யாவும்வரும் அற்புதமாய்.

கவிஞர் கோ. தனுசன், மட்டக்களப்பு (இலங்கை)

அதிகாரத்தின் அடக்குமுறையை
பின்தொடர்ந்து சமரசமின்றி ஒலிக்கிறது
புரட்சி ஓங்குக



கவிஞர் ஆதன் ஆரா, அருப்புக்கோட்டை

# தோழியை வாழ்த்திய அந்தநாள்

இன்னிசை பஃறொடை வெண்பா
ஒரு விகற்பம்

ஓவியத்தின் தூரிகையில் ஒவ்வாமை பெண்ணழகி
நாவிதழின் மெய்யழகி நாதனின் பேரழகி
பூவிதழின் மெல்லிடையாள் புன்னகையின் மங்கையாள்
பூவினம் ஏங்கிடும் பூங்கூந்தல் பற்றிடவே
சேவிப்பேன் நாள்தோறும் செந்தமிழ் பாக்களால்
தேவியின் பாதத்தில் தென்றல் அவளாகி
காவியமும் ஆகிறாள் கார்முகில் நன்கவியில்
தாவிமனம் பாடுதே தங்கமகள் அன்பினை
பாவினங்கள் வாழ்த்துதே பாவை பிறந்தநாளை
ஆவினங்கள் வாழ்த்தட்டும் அன்பு.
லதா தோழிக்கு இனிய அகவைதின வாழ்த்துகள்.

என்றும் நட்புடன்




கவிஞர் ஈ. தீவணிதீன், பல்லடம்

# நீதானே என் பொன்வசந்தம்

என் இதய தோட்டத்து பைங்கிளியே
இன்னும் எத்தனை நாள் இந்த மனப்போராட்டம் ?
வார்த்தைகளுக்கு வலிக்குமென்றா
மௌனத்தில் தவமிருக்கிறாய்?
என் இதய வலி எதுவென்று அறியாமல்
இன்னும் எத்தனை நாள் இப்படி இருப்பாய்?

நீ யதார்த்தமாய் வீசிய அத்தனை
பார்வைகளும் நான் எதிர்பார்த்தவையே!
புரிந்தும் புரியாதது போல் பாசாங்கு
செய்யும் வித்தை எங்கு கற்றாயடி பெண்ணே?
நீ கடந்து செல்லும் ஒற்றை நொடிக்காக
காத்திருக்கும் இந்த பக்தனை பாரடி கண்ணே!



என் இரவுகளின் அர(சி)க்கியே
என் கனவிலும் நினைவிலும்
நீயே.. நீயே.. நீ மட்டுமே!
கூட்டத்தில் சுற்றி திரிந்த என்னை
தனிமை விரும்ப வைத்தவளே
என் தனிமைக்கு துணையாகவும் நின்றவளே.

உன்னையே அனுதினம் சிந்தித்து
கிறுக்கியதால் கவிஞனாகி விட்டேன்.
நினைவாலும் நிதர்சனமானாலும்
நீயே என் பொன் வசந்தம்.

கவிஞர் சூர்யா. பா, ஓசூர்

# மனம் ஒரு தவம்

வேண்டும் என்ற எண்ணம்
விரிவடைந்து கொண்டே இருக்கும்
போதும் என்ற மனம் சாகும் வரை வருவதில்லை.

ஆசை எந்த கட்டத்தில் நின்று விடுகிறதோ
அந்த இடத்தில் சுய தரிசனம் கிடைக்கிறது.
இவ்வளவு போதும் என்ற மனம்
அவ்வளவும் கிடைத்ததும் அடுத்த கட்டத்திற்கு தாவும்
நிலையற்ற *மனம்* ஒரு நிலைக்குள் வந்து விட்டாள்
பற்றற்ற நிலையில் *பக்குவம்* கிடைக்கும்.



மனித வாழ்வில் ஆசை என்பது *அடி அற்ற பாத்திரம்* போன்றது
எவ்வளவு கிடைத்தும் நிரம்பாத பாத்திரம்.
மனம் ஒரு நிலையில் இல்லாது போனால்
ஆசை என்னும் அரக்கன் மனம் என்ற
*மனிதத்தை* சிதைத்து விடும் அபாயம் உண்டு.

மனம் கட்டுக்குள் இருந்தால் மனிதம் போற்றும் வாழ்வு அமையும்
மனம் அதீத சக்தி வாய்ந்த *பிடி இல்லா கத்தி* என்பதை
சரியாக உணராமல் இருந்தோமானால்
நம்மையே இழக்க வேண்டி இருக்கும் என்பதை மறவாதே.

*மனம்* என்ற குதிரையை அடக்கும் மனிதனே வெற்றியாளன்
மனம் ஒரு கட்டுக்குள் இருக்கட்டும்
மௌனம் என்பது பேசாமல் இருப்பது மட்டுமல்ல
*மனம்* பேசாமல் இருப்பதுதான்.
நொடிக்கு நூறு விஷயங்களை மனதிரையில் கொண்டு வரும்
மனதை கட்டுக்குள் வைத்தாள் அதுவும் ஒரு *தவம்* தான்.

கவிஞர் ஜேப்பி@ பன்னீர்செல்வம், சேத்தியாத்தோப்பு

# உபசரிப்பு

கலையிலே அனைவருக்கும்
கடினமாக நினைப்பது
கலவையான சமையல்தானே
கரி பிடிக்கும் விறகு அடுப்போ



கனமில்லா கேஸ் அடுப்போ
கரண்ட் மூல அடுப்போ
கடமையாக செய்யாமல்
கண்ணும் கருத்துமாக

கனிவோடு பாசம் வைத்து
கச்சிதமாக காய்களை வெட்டி
கடாயை சரியான தீயில் வைத்து
கடுகு, மிளகாய்,இன்ன பிற போட்டு தாளித்து

கட் பண்ணி வைத்த காய்களை போட்டு
கரண்டி போட்டு வதக்கி
கரைத்த புளி கரைசலை ஊற்றி
கண்ணுக்கழகான மஞ்சள் தூள் போட்டு

கலவையான மிளகாய் தூளை அளவாக போட்டு
கரிக்காமல் அளவோடு உப்பிட்டு
கலக்கி விட்டு கொதிக்க வைத்து
கலப்படமற்ற துவரை வேகவைத்து ஊற்றி இறக்க

கருவேப்பிலை, கொத்துமல்லியோடு
கட்டிப் பெருங்காயம் கரைத்த நீர் ஊற்றி வைத்துக் கொண்டு
கனமான பாத்திரத்தில் அளவான நீர் கொதிக்க வைத்து
கல் குருணை நீக்கிய அரிசி கழுவி போட்டு

கஞ்சி கோர்க்காமல் சரியான பதத்திலே வடித்து எடுத்து
கறந்த பாலில் உறையிட்டு
கட்டியான தயிர் எடுத்து வைத்து
கறிகாய் கூட்டோடு சுடுசாதத்திலே

கடும் பசிதனில்
கரங்களிலே எடுத்து சாப்பிட
கண்ட துயரெல்லாம்
கரைந்தோடி பெரு இன்பம் தந்திடுமே

கவலையோடு காசில்லாருக்கும்
கரமேந்தி வருவோருக்கும்
கனிவான இதயத்தோடு
கள்ளமில்லா உபசரித்து

கடவுள் அருளோடு
கருணை பெருக்கில் மிளிர்வோமே!

கவிஞர் நீலாசுபாஷ், ஆக்கூர்

# அன்பில் தொடங்கி அன்பில் முடிக்கிறேன்

அன்பாய் தொடங்கிட
அன்னை வந்தாள்
என்னை இருத்திட
அன்பைத் தந்தாள்



கற்றலில் மேம்பட
கனவை விதைத்தாள்
ஆற்றலோடு விளங்கிட
அறிவைத் கொடுத்தாள்

வாழ்க்கை தொடங்க
வாழ்வை அமைத்தாள்
வாழ்வின் அனுபவத்தை
வாகாய் கற்பித்தாள்

தோற்றலில் வீழ்ந்திடாது
தேற்றுதல் கொடுத்தாள்
போற்றலில் மயங்கிடாதிருக்க
பக்குவம் கொடுத்தாள்

அன்பின் உருவமாய்
அமரத்துவம் எய்தினாள்
அன்பை முடித்திடாமல்
அன்புடை பேத்தியானாள்

அன்புடை பேத்தி
அன்பில் தொடங்குகிறாள்
அன்பிற்கு முடிவின்றி
ஆளுமையோடு தொடர்கிறது

கவிஞர் செ. இலட்சுமணக்குமார், ஈரோடு

# கடிதம் எழுதுகிறேன்

என்ன எழுத்து நான் எழுத
எழுதி அனுப்ப சேருமோ
விடியலும் கூடுமோ!
வீழ்ந்து தான் போகுமோ
விதியும் தான் மாறுமோ.

விட்ட கையை நான் தேட
விண்ணுக்கு தான் போணியோ
விழி முழிச்சு பார்க்கையில
விழி மூடி கொண்டியோ!
வழி நெடுக தேடுறேனே
வழி காட்ட வாரியோ.



சிறு பூவும் சேதி சொல்ல
சிதைஞ்சு தான் போனேனே
சிறு விளக்கும் உன் முன்னே
சிறு ஒளியை தாரலியே!

கழிந்த காலமும் தான்
கண்ணாடியா காட்டுதே
கசங்குன தேதியும் தான்
கண் முன்னே வாறுதே
கண்ணீர தேடுதே!

அணைச்சிக்க வருவியோ
அப்பானு நான் அழைக்க
அவ்வாறு கண்ட கனாவும்
அந்தி சாய தேயுதே!
என்ன எழுத்து நான் எழுத

கவிஞர் சந்தியா பாவலன்

# கல்வி செல்வம்

கற்க கசடற கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக,
கற்கும் நூல்களை ஒருவன் தெளிவாக கற்க வேண்டும்
கற்றபின் நூல் கூறும் நன்னெறியில் நின்று
தன் வாழ்நாள் முழுவதும் அதன்படி நடக்க வேண்டும்.
உலக பொதுமறையாம் திருவள்ளுவரின் அற்புத வரிகள்.

கல்வி எனும் கடற்கரை தனிலே கலங்கரை விளக்காக இருப்பவர்கள்
நம் ஆசிரியர் பெருமக்கள்.
வாழ்நாள் சாதனையாளர்கள் கணக்கில் அடங்கா,
மங்கா புகழ் வரிசையில் நம் சர்வ பள்ளி திரு ராதாகிருஷ்ணன் அவர்கள்.
இன்றும் அவர் பிறந்த நாளை கொண்டாடுகிறோம்
அவரின் கல்வியின் பங்கு அளப்பரியது.
சொல்லாலும், செயலாலும் வாழ்ந்து காட்டி
மங்கா புகழை தந்தவரே நம் முன்னாள் ஜனாதிபதி அவர்கள்.



கல்வியே தனது மூச்சாக வாழ்ந்தவர்.
மாதா, பிதா, குரு, தெய்வம். இதில் தெய்வத்திற்கு முந்தியே
குருவை வணங்க சொல்கிறார்கள்.
கல்வி என்ற அமுதத்தை பருகி
நம்மையெல்லாம் கரை ஏற்றுவார்கள்.
ஒருவன் கற்கும் கல்வி ஏழு தலைமுறைக்கும் வழி நடத்தும்.
கல்வி ஒன்றே தீயால் அழியாதது திருடர்களால்
கொண்டு செல்ல முடியாதது,

ஆற்று வெள்ளம் அடித்து செல்ல முடியாதது.
கல்வி கற்றவர்களுக்கு செல்லும் இடங்களில் எல்லாம் மிக சிறப்பு.
கல்விக்கு நிகர் உலகில் கல்வியே!

கவிஞர் ஆ.கிருஷ்ணவேணி, ஊத்தங்கரை

# உனக்காய் எழுதுகிறேன்

ப்ரிய நேசகி

தொலைத்த வாழ்வை எண்ணி
இன்னும் எதற்காக
இரத்தக் கண்ணீர் சிந்துகிறாய்
கிடைக்காத அன்பிக்காய்
கிடந்தழுதது போதும்
கண்களைத் துடைத்துக்கொள்.



தூக்கமில்லா இரவுகளில்
நனவென நீ நினைத்த
கனவுகளைத் தேடிப் பார்ப்பதில்
மீதியுள்ள வாழ்வையும்
தொலைத்து விடாதே.
உற்சாகமாய் எழுந்து நடமாடு.

கரைந்து கரைந்து
குப்பையைக் கிளறிக் கரையும்
காக்கையின் வம்சமா நீ
விழாதெழுந்து உயரே பறக்கும்
கழுகின் வம்சம் அன்றோ நீ.
கம்பீரமாய் நிமிர்ந்து நில்.

விதிப்படி தானே வாழ்க்கை
விழியோரம் கண்ணீர் எதற்கு
விளக்கொளியில் பறந்து
விடியலில் மறையும்
விட்டில் பூச்சியல்லவே நீ
தலைகுனிய வேண்டியது நீயல்ல.

படைத்தவனின் பேரன்பில்
உன் கவலைகள் மறக்கட்டும்
இரவின் மடியில்
இனி நீ நிம்மதியாகத் தூங்கு.
பறிக்கப்பட்டு மரித்துப்போன
மாங்கல்யத்தை மறந்து விடு.

ஒன்றை மட்டும் ஞாபகத்தில்
வைத்துக் கொள்ளத் தவறாதே
இனியும் பேதையாய்
போலி நட்புக்களை நம்பி
ஏமாந்து விடாதே!

கவிஞர் செண்பகச் சோலையாள் ஆயிஷ்

## ஆண்டாள் 17

### நாச்சியார் நான்காம் திருமொழி
### பாடல் 07முதல் 11முடிய 05பாடல்கள்

விரோதிகளாம் தீதாற்றிய சிசுபாலன் மாற்றுருவில்
அசுரர்கள் பகாசுரனொடு கம்சனென யாவரையும்
அழித்திட்ட ஆற்றலாளன் எம்பெருமான் கோதையொடு
கூடவரில் நடத்தித்தர கண்ணனையே வேண்டுகிறாள்
ஆண்டாளே! பாசுரமாம் ஏழினிலே ஈதறிய
குறிகாண்பாள்! மாதுகோதை மால்காதல் இவ்வணமே!
ஆவலன்பு மிக்குடைய நெஞ்சமன்றி வேற்றிடத்தில்
பொருந்தாத ரக்ஷகனான கண்ணனவன் மிக்கெளியன்!
கன்றுமேய்க்கும் ஆயர்மகன் தன்னுடனே கூடவரில்
நடத்திக்கொடு எனவேண்டி குறியதனை காண்கின்றாள்!
நாச்சியாரே! எட்டாவது பாசுரமாய் அமைந்ததுவே
தன்னுடைமை ஆனவுலகை அளந்துற்றவன் கண்ணனவன்!
தன்னையே அவனுடனே சேர்த்துக்கொள வருவானா
என்றறிய குறிதன்னை பார்க்கின்றாள்! ஒன்பதாவது
பாசுரத்தே வாமனனின் தோற்றத்தன் த்ரிவிக்ரம
பேருருவில் கீழ்மேலாம் ஈரேழு உலகளந்தோன்
தன்னையே சேர்ந்திடற்கு வருவானேல் நடத்தித்தர
வேண்டுகிறாள் ஆண்டாளே! எம்பெருமான் ரக்ஷகன்தான்
வருவானா என்றகுறி காண்கின்றாள் ஒன்பதிலே!
கால்கவ்விய முதலையது வீழ்ந்திடவே யானைதனை
ரக்ஷித்தமாயன் தன்னையுமே ரக்ஷித்திடவே வருவானேல்
நடந்திடவே துணையாக நின்றுதவ வேண்டுகின்றாள்!
மன்பதையின் மாதராரை ஈர்க்கின்ற சுந்தரன்தான்!
எழில்மாதர் நெஞ்சத்தே வதிபவன்தான்! தன்னிடத்தே
சேரவரில் நடத்தித்தர வேண்டுவளே பத்ததனில்!
ஈற்றுப்பா பதினொன்றில் இப்பதிகம் பாடவல்லார்
கூடலூடல் உணர்ந்துபுணர் எம்பெருமான் கூடலன்றி
பிரிவிலையே! துன்பமிலை! வைகுந்த வாழ்வமையும்!
என்றுபலன் கூறுகின்றாள்! நான்காவது திருமொழியது
முற்றுப்பெறும்! ஐந்தாவது குயிற்பாட்டு காண்போமே!



கவிஞர் கணக்காயன் (இ.சே.இராமன்)

ஆன்றோர்-சான்றோர்களை உருவாக்கும் உங்களுக்கு !
சிந்தனையை சிறப்பாக செயலாற்றும் தங்களுக்கு!
பாரினிலே பார் போற்ற வாழவே!
துயர் துடைக்க கருத்தாக கற்றுத்தரும் நீர்!
தினம் திறமைகளை போற்றும் நீர்!
வாழ்வாங்கு வாழ
எத்திசையிலும் எல்லா புகழும் பெற்று - வாழ
வாழ்த்தும் வயதில்லை வணக்கத்துடன்
வாழ்த்துக்கள் - பல பெற்றிடவே வாழ்த்தும் உள்ளம்.




கவிஞர் மு.கவிபாலன் (எ) மு.சோமசுந்தரம், சிதம்பரம்

# தேநீர் விருந்து



தினமும் விருந்தாகி
நகரமறுத்து
காலைக்கு
வணக்கம் சொல்லி

மனதோடு உறவாடி
விரலோடு உரசி
ஓர் கவிதை தான்
தேங்காத தேநீர்

ஆனாலும் தேங்கிவிட்டாய்
வார்த்தையால் ஒரிடத்தில் அமர்ந்து
ஆவியைப் பரப்பி அழகான
மௌனத்தில்
விருந்து விடைபெற மனமின்றி

கவிஞர் சுந்தரிபாஸ்கரன், திருப்பூண்டி (நாகப்பட்டினம்)

# கவிஞர் பார்வையில்

ஆகாயத்தை காகிதமாய்
உவமைத்து.
கரம் தாங்கும் பேனாவாய்
மாரியவனையும் வானின் நீலத்தை
தொடுத்து.

கவியை சிறப்பிக்க
கண்களை மூடியே
நிதர்சன அவனி துறந்து
கற்பனையாய் அவனுலகில்
சிறகடிக்க.



வரிகளின் அற்புதம்
அவனையே அசத்திடுமே.
அங்கம் சிலிர்க்க
வாசித்த வரிகளில்

புதிதொன்று கற்றே
பாதை அமைத்து பயணிக்கிறான்
அவன் மேதினியின்
பார்வையில்.

கவிஞர் ச.கார்த்திகா, பழநி

# தேடல்



அழகியல் சுமந்த
முந்தைய வாழ்வினை

அன்றைய தினம்
உதாசீனப்படுத்தி விட்டு

அழுதபடி தேடுகிறோம்
இன்றைய வாழ்வில்!

கவிஞர் இரா. கோமதி, பொள்ளாச்சி

# இணைப்பு இனியும் வேண்டாம்



உதறி சென்றவர்கள்
மிகையாக
உளறியும் செல்வார்கள்
அனைத்தையும்
உதவியதாகவும் சொல்வார்கள்
கொஞ்சம்
பிதற்றவும் செய்வார்கள்.

உதறி சென்றவர்கள் ஒன்றும்
உத்தமர்கள் இல்லையே.

தானாக உதறி செல்பவர்களை
இணைத்துக்கொள்ள
சந்தர்ப்பங்கள் உருவாகிட
வேண்டாமென்றுதான்
வேண்டிக்கொள்கிறேன்.

கவிஞர் இரா. இராஜமோகன், அயன் குறிஞ்சிப்பாடி

# என் எழுத்துக்கள்



யாருக்காகவும் இல்லை
எனக்காக மட்டுமே
என்னின் எழுத்துக்கள்
என்னை ரசிக்கவே

பார்க்க கம்பீரம்
பழக குழந்தை
ஊருக்கே காவலாளி
எனக்கு கூட்டாளி

எல்லாம் இருந்தும்
எதையோ பறிகொடுத்ததாய்
முதியோர் இல்ல
ஏதிலித் தனிமை

நேற்றில் தொலைந்தவன்
நாளையை யோசிப்பதில்லை
தற்கணத்தை ரசிக்கவே
எனக்கு நேரமில்லை

தொடர் முயற்சிகள்
தளரா பயிற்சிகள்
திகட்டும் தோல்விகளை
துரத்தும் மந்திரங்கள்

இலக்கணங்களில் நம்பிக்கையில்லை
இலக்கியங்களில் பரிச்சயமுமில்லை
இதயத்தின் மொழி
இரசிகர் வழி

கவிஞர் ராஜ் ஆரோக்கியசாமி, பிச்சாண்டார் கோவில்

# வழிகாட்டி எனும் கருத்தியல்காரன்

அன்பையும் அறிவையும் தெளிவுற ஊட்டிய
தந்தைக்கும் தாய்மைக்கும் ஈடான அறிவுச்சுடர்
கற்றலையும் போதித்தலையும் தன் ஆன்மாவின்
அடி நாதத்தில் இருந்து அனுதினமும் செறிவுற
ஊட்டி கொண்டு இருக்கும் பேராசான்
வழிகளையும் அதில் வரும் தடைகளையும்
தகர்த்து என ஊக்கம் கொடுத்தவன் ஆசான்
தளர்வுற்ற நேரத்திலும் தைரியம் தந்தவன் ஆசான்
இவன் எங்கு உருபடுவான் என்றவர்களின் முன்னால்
வளரும் பிள்ளை வாழ்த்துங்கள் என்றவன் பேராசான்
தான் அறிந்ததை தரணியில் பதித்தவன்
தமிழ் புலமையால் கவி படைத்தவன்
தான் கற்றதை பிறர் கற்றரிய போதித்தவன்
பாகுபாடுகள் இன்றி பற்றவைத்தவன் கல்வியை
ஆயுதங்கள் இன்றி அறிவை கூர்மைப் படுத்தியவன்
ஏர் பிடிக்க இருந்த கைகளில்
எழுதுகோலை வலிமையாக மாற்றியமைத்தவன்
சொல்லும் செயலும் வெல்ல பல சோதனைகளை தந்தவன்
அவற்றை சாதனைகளாக மாற்ற வித்திட்டவன்
வாழ்க்கையின் கருத்தியலை பற்ற வைத்த
பெரும் தீப்பொறி ஆசிரியரே



கவிஞர் முனைவர். அக. வீரவன்சாரா, வளையமாதேவி (சிதம்பரம்)

# கடிதம் எழுதினேன்

உறவுகளுக்குக் கடிதங்கள் எழுதிய காலங்களை
மறக்க இயலுமா? எண்ணங்களை, நிகழ்வுகளை
உரைத்திடவும், பண்டிகை நாட்களில் வாழ்த்துகளைப்
பகிர்ந்திடவும், உறுதுணையாய்த் திகழ்ந்தன கடிதங்கள்!
கம்பியொன்றில் வந்த கடிதங்கள் கோர்க்கப்பட்டு
அந்நாளின் ஆவணமாய்த் திகழ்ந்தன வீடுகளில்!
இரண்டாயிரம் ஆண்டின் பிறப்பிற்குப் பின்னும்
இருந்தது கடிதங்களை எழுதும் பழக்கம்!
இணையம் , மின்னஞ்சல், குறுஞ்செய்தி, தொலைநகல்
இவற்றின் வரவாலே காணாமற் போனவைகளாய்
கடிதங்கள் மாறினவே! வானிலை நிலவரங்கள்,
வீட்டில் நிகழ்வுகள், ஊரின் நடப்புகள்
விளைச்சல் விவரங்களைப் பரிமாறின கடிதங்கள்!
கடிதங்களின் வரவுக்குக் காத்திருந்த காலமுண்டு!
படிக்கும் போதெல்லாம் உயிர்த்துடிப்பு நிகழ்ந்ததுண்டு!
எழுதப் படிக்கத் தெரியாத நபர்களுக்கு
எழுதிக் கொடுப்போம் கடிதங்களை! அவர்களுக்கு
வந்த கடிதங்களை வாசித்துக் காட்டுகையில்
அன்பின் வெளிப்பாடாய் சிந்திடுவர் கண்ணீரை!
உறவினரின், நண்பர்களின் கையெழுத்தைக் காண்கையிலே
பரவசம் மிகுந்திடும்! உறவுகள் பலப்படும்!
திறன்பேசி வரவின்பின் மாறியது இந்நிலைமை!
கருத்தாழம், சொற்குவியல், இலக்கிய நயமிக்க
அறிஞர்களின் கடிதங்கள் வரலாறாய்த் திகழ்கிறதே!
அழியாப் புகழுடன் திகழ்ந்திடுமே எந்நாளும்!
காலக் கண்ணாடியாய்த் திகழ்வன கடிதங்கள்!
நாளைய தலைமுறைக்கும் பொக்கிஷம் கடிதங்கள்!
பணிநிமித்தம் பிரிந்திருந்த காலத்தில் எனக்கு
அன்பைப் பரிமாறின பெற்றோரின் கடிதங்கள்!
மூத்தோரின் கடிதங்களில் சிலவற்றை இப்போதும்
பத்திரமாய் வைத்துள்ளேன்! படிக்கும் போதெல்லாம்
அந்நாளின் நினைவுகள் என்னுள் மலர்கிறதே!
கடிதங்கள் புழக்கத்தில் இருந்த தலைமுறையில்
இடம்பிடித்ததை எண்ணி இந்நாளில் மகிழ்கின்றேன்!



கவிஞர் ஈ.சீ.சேஷாத்ரி

இளைப்பாறும் எண்ணத்தில்
பறவை யொன்று புவிமீதில்

தேடித்தேடி எங்கோவொரு
இடத்தில் உறங்கிய பின்

உறக்கம் கழறாத விழிப்புக்குள்
அத்துவான காட்டில்
பாதிக் கனவுகளிடையில்
திறவாத இமைகளுக்குள்

தோளில் சுமக்கும் இதயம் தேடி
கை வீசி நடக்கும்!



கவிஞர் ஜெயப்பிரபா, சென்னை 81

# கற்றல்

கற்பித்தலின் இனிமை
கற்பதன் ஆவலைத் தூண்டும்!
கற்றலில் ஆர்வம் நம்மை
தேடித்தேடி கற்க வைக்கும்!
கவனத்துடன் கற்பது
காரிய சித்தியைக் கொடுக்கும்!
கற்ற கல்வியை வாழ்வுடன் இணைக்க,
நேர்மையும் ஒழுக்கமும் கடைசி வரை
துணை நிற்கும்!
கற்றவனின் சிறப்பை
தலைமுறைக்கும் எடுத்துச் சொல்லும்!
கற்பதும், கற்பித்தலும்
கைகோர்த்து நடந்திட
உலகம் தழைக்கும்!




கவிஞர் லதா சுப்ரமணியன், சென்னை-119

# பெண்ணின் நோவு

கணவனுக்கு காய்ச்சல்
கசாயம் வைத்துக் கொடுத்துக்
கசந்தவாய்க்கு கஞ்சிக் காய்ச்சி
கைகால் பிடித்துவிட்டு
பாடாய்படுத்தி எடுத்து
பாதிஉயிர் எடுத்தவரைப்
பணிக்கு அனுப்பிவிட,
பகர்ந்தது பிள்ளைகளுக்கு
பத்தியம் பலசெய்து
பிணியகற்றிப்பக்குவமாய்
பள்ளிகல்லூரி அனுப்பிட
அடுத்ததாய் வந்தது
அவளுக்கும் நோவு
மருந்து சாப்பிடு சரியாகும்
அனைவரின் பதில்.
அனத்தியபடியே
அடுப்படி வேலைமுடித்து
பல்நடுங்கும் குளிரிலும்
பச்சைத் தண்ணீரில்
பாத்திரம் கழுவி
பணிக்கனுப்பிய பிறகு
படுத்தவளின் கண்ணில்
சூடானக் கண்ணீர்
சுருக்கென வலிக்கும்
தொண்டைக்கிதமாய்
சுடுநீரோ,சுக்கு காபியோ
தந்திட ஆளின்றி
சுருண்டு கிடக்கிறாள்.
அடுப்பைப் பற்றவைக்க
அவள்தானே எழவேண்டும்.



கவிஞர் ஷீலாதேவிஅருணாசலம், நாகர்கோவில்

# பெண்ணின் நோவு

 யாரும் தேடாத
யாருக்காகவும் வாடத
வாழவென்பதோ
அவளின் அதிகபட்ச கனவானது

அன்று வீட்டுசுவற்றை
அலங்கரித்த புகைப்படங்கள்
இன்று கைபேசியில் கைதாகியது!

தடுமாறும் சமயங்களில்
தட்டிக்கொடுக்க ஆள்தேடாதே
உன் இருகைகளே போதும்
துவளும் போதெல்லாம் தலைகோத
இரவல்கைகள் எப்போதும்
கிடைப்பதில்லை !

பூ விற்கும் பாட்டி
கூடுதலாகவே வழங்குகிறாள்
புன்னகைப் பூவை

பிழையானவள்

-------------------------------

பிரியமானவளாய்
இருந்த நான் என்று
பிழையானவளாய்
ஆனேன் என்று
எண்ணியே கழிகிறது
எந்தன் பொழுதுகள்



 கைப்பாவையாக
இருந்தவரை கிடைத்த
காதலி பட்டம்
காற்றில் கரைந்தது
ஏன் என்ற வினாவால்

என்னை குறித்து நீ வாசிக்கும்
குற்றப்பத்திரிக்கையில்
உன் இயலாமையை
என் அறியாமை என்று விளம்புகிறாயே
ஒ இதுதான் உன்னில் என்னை கலப்பதோ

சண்டையிடும் போதெல்லாம்
என் குழந்தை என வாதிடும் நீ
கழிவறை பணிவிடைகள் செய்ய
விருப்பம் தெரிவிக்காததும் ஏனோ

உனக்கான தேவைகளுக்கு
வெள்ளை கொடியுடன் வலம் வரும் நீ
என் தேவைகளின் போது நீதி தேவதையாக
நியாய தராசு ஏந்துவதும் ஏனோ!

கவிஞர் ரா. சண்முகவள்ளி ஸ்ரீனிவாசன், தென்காசி

# ஆரம்ப பள்ளி ஆசிரியர்

அ வன்னா போட்டு என் வாழ்க்கையில் இருள் அகற்றி
ஜோதி ஏற்றி வைத்த ஆசியர் ஜோதி!
தமிழ் என்னும் கடலில் சமத்தாய் அழைத்து சென்ற சிரியர் சந்தான லட்சுமி !
ஆங்கிலம்வரவே வராது என்றவனை தேனில் மருந்தை குழைத்து தந்து
ஆங்கிலத்தில் தேர்ச்சி பெற வைத்த ஆசிரியர் நாகலட்சுமி !
கணிதம் என்றாலே கதிகலங்கும் எங்களை
கண்ணியமாய் வார்த்தெடுத்த ஆசிரியர் சரோஜா!
அறிவியல் என்றாலே அலறி ஓடும் எங்களை ஆக்கத்துடன்
கவனமாய் கவர்ந்திழுக்கும் ஆசியர் கௌரி!
சமூகறிவியலை சமத்துவமாய் சொல்லி சாறு எடுக்கும் ஆசிரியர் தனலட்சுமி!
எந்த ஆசிரியர் வரவில்லை என்றாலும் நான் வருகிறேன் என்று
அழகாய் பாடம் எடுக்கும் ஆசிரியர் அழகுவேல்
ஓவிய ஆசிரியர் பணியில் சேர்ந்து ஓர் ஆல் ரவுண்டராய் வலம் வரும் எந்தன் ஆசான்!
(இவர்களிடம் இருந்து விடைபெற்று 11ம் வகுப்பில் சேர்ந்தோம். எங்களின் பள்ளி
அரசு மேல்நிலைப் பள்ளி என்பதால் அதே பள்ளி வளாகத்தில் அதே தலைமையாசிரியரின் கீழ் பயிலும்
பாக்கியம் பெற்றோம் )
நாங்கள் எடுத்த பாடப்பிரிவு வணிகவியல் நாவினிலே சங்கத்தமிழ் நடனமாடும் ஆசிரியர் நடராஜன்
என் சொல்ல! சேட்டைகள் பல செய்தாலும் சாட்டை கொண்டு அடிக்காமல் சாந்தமாய் எடுத்தியம்பும்
ஆங்கில ஆசிரியர் சட்டநாதன் என் சொல்ல!
கணக்குபதிவியல், வணிகத்தையும் தெளிவாக விளங்கி சித்திரம் போல்
செதுக்கிய ஆசிரியர் சித்ராவை என் சொல்ல!
வரலாற்று பாடத்தை எடுத்து வரலாறாகவே வாழ்ந்துவரும் ஆசான்
அசோக்குமார் மாற்றுத் திறானாளி ஆசிரியர்
எதற்கெடுத்தாலும் ஒப்பிட்டு பார்க்கும் ஆசிரியர்களுக்கு மத்தியில்
தன்னுடைய வாழ்க்கையே எடுத்து காட்டி பாடம் நடத்தும் இவரின் பாங்கை என் சொல்ல!
மாற்றுத்திறனாளியின் என்னுடைய வாழ்க்கையே மாற்றியது கல்வி என்பார் அவர்!
எங்களை போன்ற எத்தனையோ மாணவர்களின் வாழ்க்கையை மாற்ற
அவர் இருக்கிறார் என்பதையறியாமல் !
பொருளாதாரத்தை சுத்தமாக ஆராய்ந்து தூய தமிழால் விளக்கி சொல்லும்
ஆசிரியர் சுந்தரமூர்த்தியை என் சொல்ல!
இவர்களுக்கெல்லாம் தலைமை ஏற்று தலை தெறிக்க ஒழுக்க பாடம் எடுக்கும்
தலைமை ஆசிரியர் சையத் நயீம் என் சொல்ல !
கல்லூரி வாழ்க்கையில் வணிகமேலாண்மை பிரிவை எடுத்தேன்
அதில் அனைவரையும் கவர்ந்திழுத்த பேராசிரியர் கார்த்திக் மேன்மையை என்ன சொல்ல!
நண்பனாக உடனிருந்து வழிகாட்டும் அசாத்தியவான் கார்த்திக் சார்!
மேலாண்மை பாடத்தை ரம்யமாய் எடுத்து சொல்லும் பேராசிரியர் ராமமூர்த்தி என் சொல்ல!
வாழ்க்கையின் ஏற்றத்தாழ்வுகளை எளிமையாய் எடுத்தியம்பும் பேராசிரியர் ஏஞ்சல்ஸ் என்ன சொல்ல !
மேலாண்மை பாடங்களை தன்மையாய் சொல்லும் தனசேகரன் என் சொல்ல!
பார்ப்பதற்கு கரடு முரடாய் தெரிந்தாலும் பழகுவதற்கு எளிமையாக இருக்கும்
பேராசிரியர் சுந்தரமூர்த்தி என் சொல்ல!
கல்லூரியில் எந்தன் கிறுக்கல்களில் சௌமியம் உண்டு என்று
எனது எழுத்துக்களை செதுக்கிய சௌந்தராஜன் என் சொல்ல !
அனுபவமே ஆசான் என்பதால் தினந்தினம் பல அனுபவங்களை
வாழ்க்கை கற்றுக்கொடுத்து தான் இருக்கிறது
ஆக வாழ்க்கையே ஆகச்சிறந்த ஆசான்!



கவிஞர் தினேஷ் கண்ணா

# உதய தாரகை

## நாடகம்

நம் வாழ்க்கை முறையிலே மிகவும் உயர்ந்த ஒன்றான விருந்தோம்பல் என்னும் உயர்ந்த பண்பை இந்நாடகம் மூலம் சுட்டிக் காட்டி அதனால் ஏற்பட்ட நன்மைகள், எவ்வளவு நட்புறவுகள் உருவாகின்றன என்பதை ஒரு சிறிய கோடிட்டு காட்டிடவே இந்த உதய தாரகை நாடகம் உங்கள் முன்னால்.

குடி- குடியைக் கெடுக்கும் என்பது பழமொழி. அதே குடிப்பழக்கத்தின் தீமைகளையும் அதனால் ஏற்பட்ட பலவகை கொடுமைகளையும் அதனால் அழிந்து போன பலருடைய வாழ்க்கையையும் கூட நாம் பல வேளைகளில் கண்கூடாக பார்த்திருக்கவும் செய்திருக்கிறோம்.

குடிப்பழக்கத்தினால் எவ்வாறு மக்கள் பலரின் குடும்பம் பாதிக்கப்படுகிறது. அதனால் எத்தனைக் குடும்பங்களின் அடிப்படை வாழ்க்கை சீரழிக்கப்படுகிறது என்பதையும் ஒரு கடலின் ஒரு துளியாக தொட்டுக் காட்டியுள்ளோம்.

வாழ்வில் விருந்தோம்பல் என்னும் பண்பு எவ்வளவு பெருமை வாய்ந்தது என்பதையும் மதுப்பழக்கம் எவ்வளவு கெடுதலானது என்பதையும் எமது உதய தாரகை நாடகம் மூலம் உணர்த்த முயன்றிருக்கிறேன்.

உங்கள் ஒவ்வொருவர் வாழ்விலும் உள்ளங்களிலும் 'உதய தாரகை' ஒளிவீசிட எமது அன்பின் நல்வாழ்த்துக்கள்.

### காட்சி-1

தேவாலயவளாகம்

பாத்திரங்கள்: சகாய நாதன், எழிலரசி, ரோட்ரிக்ஸ், எமல்டா

**சகாய நாதன் :** ஹாய் ரோட்ரிக்ஸ் குட்மார்னிங் வாங்க எமல்டா சர்ச்சுக்கு வந்தீங்களா?

**எமல்டா:** ஆமாம், ஆங் உங்க மனைவி எழிலரசி வரவில்லையா?

**சகாய நாதன் :** அதோ, வந்து கொண்டிருக்கிறாள். (என்றவாறு பின்னே கையை காட்டினார்)

**ரோட்ரிக்ஸ்:** அதானே பார்த்தேன். சகாய நாதன் எப்போதும் தனியாக வரமாட்டாரே! வணக்கங்க எழிலரசி

திரு இரீஜனை நிலவன்

# நாடகம்

எழிலரசி: வணக்கங்க, என்ன இந்த நேரத்திலே இந்தப் பக்கம்?

எமல்டா: சும்மா பாதரை பார்த்து விட்டு போகலாமென்று வந்தோம். அது சரி நீங்கள்...

சகாய நாதன் : சர்ச் மெயின்டனன்ஸ் பணம் கட்டணும். அப்படியே தேவாலயத்திற்குப் போய் விட்டு வரலாம் என்று நினைத்தோம். என்ன ரோட்ரிக்ஸ் இப்படி வியர்த்துக் கொட்டுகிறது? ஏதாவது பிரச்சனையா?

எமல்டா: அது...

ரோட்ரிக்ஸ் : கொஞ்சம் தலையை சுற்றுகிற மாதிரி இருக்கிறது. (கர்ச்சீப்பை எடுத்துமுகத்தை துடைத்துக் கொள்ள)

சகாய நாதன் : அய்யய்யோ. என்ன பிரச்சனை! எழில் கொஞ்சம் தண்ணீர் பாட்டிலை எடுத்து ரோட்ரிக்ஸ்க்கு கொடு. (எழிலரசி தன் பையிலிருந்து தண்ணீர் பாட்டிலை எடுத்துக் கொடுக்க வாங்கிக் குடித்தார் ரோட்ரிக்ஸ்)

ரோட்ரிக்ஸ் : சகாய நாதன் உங்களிடம் சொல்வதற்கு ஒன்றும் ரகசியமில்லை. ஆல்கஹாலிக் அனானிமஸ்.... அதான் குடியை நிறுத்துவதற்கு வாரந்தோறும் புதன் கிழமை மதியம் நம் தேவாலயத்தில் ஒரு கூட்டம் நடக்கிறது. அதிலே கலந்துக்க வேண்டுமென்று என் மனைவியின் வற்புறுத்தல் தாங்காமல் வர வேண்டிய சூழ்நிலையாகி போய் விட்டது.

சகாய நாதன்: கொஞ்சம் அளவாகக் குடிக்க வேண்டியது தானே?

எமல்டா : என்னது அளவாகக் குடிக்கிறதா? குடித்து குடித்து குடலில் பாதி வெந்து போச்சு. இன்னும் நிறுத்தவில்லை. என்றால் எனக்கு கணவரே கிடையாது என்ற நிலை. இவரிடம் சொல்லி சொல்லி சலித்துப் போய் விட்டது கேட்கிற மாதிரி தெரியவில்லை.

எழிலரசி : குடிக்க விடாமல் பார்த்துக் கொள்ள வேண்டியது தானே.

எமல்டா : சின்னக் குழந்தையா? பின்னாலே திரிவதற்கு கொஞ்சம்| சொல்லி விட்டு அந்தப் பக்கம் போய் விட்டு வருவதற்குள் எங்கேயாவது போய் குடித்து விட்டு வந்து விடுகிறார்.

தொடரும் ...

திரு இரீஜனை நிலவன்

# நூல் அனுபவம்

(புதுக்கவிதைகளின் பூங்காவனம்)

"கவிமாமணி" இரஜகை நிலவன்



மொழிகளில் செம்மொழி
நம் தமிழ் மொழி
நிகழ்ச்சிக்கு அழைத்ததும்
இசைந்தது உமது விழி

கவிதையின் தலைப்புத்தான் சிரம்
அதில் அமைந்த உமது ஒவ்வொரு வரியும் தங்கம்
கவியே, நீர் எங்களுக்கு கிடைத்த வரம்
தமிழில் நீவீர் ஓர் அங்கம்
விலங்கினை உடைத்தெறியவும்
விளக்கத்தை கவியில் தறிக்கவும்
சொற்களால் தீயோரை சுட்டெரிக்கவும்
வரிகளால் வரியோரை கத்தரிக்கவும்

வந்திருக்கும் கவிஞருக்கு, மிக அழகான வர்ணனை வரிகள்,
சிறப்பு வாழ்த்துகள் கவியே
புதுக்கவிதை என்பதற்கான வரைவிலக்கணம் என்பது இன்றைய சூழலில் பல்வேறுபட்டதாகக் காணப்படுகின்றது. எனினும் இலகுவாக புதுக்கவிதை என்பது கவிதைக்குரிய மரபு, இலக்கணம் அற்ற ஒரு கவிதை முறையாக நோக்கப்படுகின்றது. மரபுக்கவிதையானது சீர், தளை, அடி, தொடை என்னும் கட்டுப்பாடுகளைக் கொண்டு காணப்பட புதுக்கவிதை அவற்றை புறந்தள்ளியதாக புதுக்தோற்றத்துடன் காணப்படுகின்றது

ஒரு கருப்பொருளை காட்சியாகக் கொண்டு நம்கண் முன்னே கொண்டு வந்து நிறுத்தும் எளிய வடிவம் புதுக்கவிதை இந்த புதுக்கவிதை உலகிற்கு புதுப்பாதை அமைத்த பெருமை கவியரசு நா.காமராசன் அவர்களையே சாரும்.

ஒரு கவிதை என்பது உன்னிடம் உன்னையே தருவது.
எனக் கவிதை என்றால் என்னவென்று ஒவ்வொருத்தரும் ஒவ்வொன்றாய் சொல்லி விட்டுப் போக.

இக்கவிதைகளை வாசித்து விட்டு கடும் விமர்சனம் தந்தாலும்...இல்லையெனில் முதுகில் ஒரு தட்டு தந்தாலும் அல்லது எனக்கு சாமரம் வீசும் வாழ்த்து தந்தாலும் ஆசிரியன் கண்டிப்பாக மகிழ்ந்து போவான்.

கவிஞன் ஸ்ரீ

# தி.ஜ.ரங்கநாதன்

## கட்டுரை

### பிறப்பு, கல்வி



திங்களூர் ஜகத்ரட்சகன் ரங்கநாதன் என்னும் தி.ஜ. ரங்கநாதன், தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள திங்களூரில், ஏப்ரல் 1, 1901 அன்று பிறந்தார். ஒரத்தநாடு பாடசாலையில் நான்காம் வகுப்புவரை படித்தார். தொடர்ந்து சுயமாகப் பயின்று அறிவியல் மற்றும் தொழில் நுட்பங்களை அறிந்துகொண்டார். ஆங்கிலப் புத்தகங்களை அகராதிகளின் துணைகொண்டு படித்தார். சதுரங்க விளையாட்டில் தேர்ச்சி பெற்றார்.

### தனி வாழ்க்கை

தி.ஜ.ர.வின் தாய் 1922-ல் காலமானார். தந்தை பார்த்துவந்த கர்ணம் வேலையைச் சிறிது காலம் தி.ஜ. ர. பார்த்து வந்தார். நில அளவைக்கான பயிற்சி பெற்றார். திண்ணைப் பள்ளிக்கூடம் ஒன்றில் ஆசிரியராகப் பணியாற்றினார். வழக்குரைஞரின் அலுவலக உதவியாளராகச் சில மாதங்கள் பணிபுரிந்தார். மளிகைக் கடைச் சிற்றாள் உள்பட பல்வேறு பணிகளில் ஈடுபட்டார்.

தி.ஜ. ரங்கநாதன், சுந்தரவல்லியை 1914-ல் திருமணம் செய்துகொண்டார். இவர்களுக்கு சீனிவாச வரதன், பார்த்தசாரதி, சேஷாத்திரி என மூன்று மகன்கள். பங்கஜம், பாப்பா, மஞ்சரி என மூன்று மகள்கள். 'மஞ்சரி' இதழில் பணியாற்றிய காலத்தில் பிறந்ததால் மகளுக்கு 'மஞ்சரி' என்று பெயரிட்டார்.

### அரசியல்


1920-ல், சுதேசி இயக்கத்தின் சார்பில் நிகழ்ந்த அந்நியத் துணி புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டார். அதனால் சிவகங்கையில் கைது செய்யப்பட்டு 11 மாதங்கள் சிறையில் இருந்தார்.

### இலக்கிய வாழ்க்கை

தி.ஜ. ரங்கநாதன், திருக்காராயல் என்ற கிராமத்தில் வசித்து வந்த காலத்தில் 'ஐரோப்பிய யுத்த சரித்திரம்' என்ற நூலைப் படித்தார். இந்த நூல் அவருள் பல தாக்கங்களை ஏற்படுத்தியது. தானும் எழுத வேண்டும் என்ற உந்துதலைத் தந்தது. தி.ஜ. ரங்கநாதனின் முதல் கட்டுரை 1916-ல், 'ஆனந்த போதினி'யில் வெளியானது. கவிதை அதே ஆண்டில் 'ஸ்வராஜ்யா' இதழில் வெளிவந்தது. அதனைத் தொடர்ந்து சுதேசமித்திரன் இதழில் அவரது படைப்புகள் வெளியாகின.

திரு. அ. வில்சன், இதழாசிரியர்


### சிறுகதைகள்




தி.ஜ. ரங்கநாதனின் முதல் சிறுகதைத் தொகுப்பு 'சந்தனக் காவடி' 1938-ல் வெளிவந்தது. தொடர்ந்து 'நொண்டிக்கிளி, 'வீடும் வண்டியும்', 'மஞ்சள் துணி', 'காளி தரிசனம்' போன்ற சிறுகதைத் தொகுப்புகள் வெளிவந்தன.

### சிறார் இலக்கியம்

தி. ஜ. ரங்கநாதன் 'பாப்பா' என்ற சிறார் இதழில் சில காலம் ஆசிரியராகப் பணியாற்றினார். 'தியாகபாரதி' என்ற குழந்தைகள் இதழுக்கு ஆலோசகராகப் பணிபுரிந்தார். 'சக்தி' இதழில் 'பாலன்', 'நீலா' போன்ற புனை பெயர்களில் சிறார்களுக்கான பாடல்கள், சிறுகதைகளை எழுதினார். டால்ஸ்டாயின் 'குழந்தைகள் அறிவு' என்ற நூலினைத் தமிழில் மொழிபெயர்த்துத் தொடராக வெளியிட்டார்.




தி.ஜ. ரங்கநாதன், கண்ணன் சிறுவர் இதழில் 'முயல்', 'ஆவாரங்காடு', 'புறா', 'கிளி', 'சந்திரனில் தமிழன்', 'பூனை', 'சோம்பேறி சொக்கன்', 'அணில்', 'காட்டுவீடு' எனப் பல சிறுவர் சிறுகதைகளை எழுதினார். அறிவியல் நூல்கள், கட்டுரைகள், வாழ்க்கை வரலாற்றுக் கதைகள், பாடல்கள் எனப் பல படைப்புகளைத் தந்துள்ளார். டாக்டர் பூவண்ணன், தி.ஜ.ரங்கநாதனின் குழந்தை இலக்கியப் படைப்புகளைப் பற்றி ஆராய்ந்து நூல் ஒன்றை எழுதியுள்ளார்.

### செல்வாக்கு

ஜெயகாந்தனின் முதல் சிறுகதைத் தொகுப்புக்கு முன்னுரை எழுதியது தி.ஜ. ரங்கநாதன் தான். கண்ணதாசன், வனவாசம் கட்டுரை நூலில், தன்னுடைய உரைநடைக்கு முன்னோடி என்று தி.ஜ. ரங்கநாதனையும் அவரது 'ஆஹா ஊஹூ' கட்டுரையையும் குறிப்பிட்டுள்ளார். தி.ஜ. ரங்கநாதன் சிறுகதைகள் சிலவற்றை மஞ்சேரி எஸ். ஈச்வரன் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார்.

திரு. அ. வில்சன், இதழாசிரியர்

# தி.ஜ.ரங்கநாதன்

## கட்டுரை

விருதுகள்,ஏற்புகள்

- தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் பரிசு - சிறுகதைத் தொகுப்புக்காக.
- தமிழக அரசின் பரிசு: குழந்தை இலக்கிய வளர்ச்சிக்காக.
- குழந்தை எழுத்தாளர் சங்கத்தின் கேடயம் : குழந்தை இலக்கியப் பணிகளுக்காக.

நூல்கள்

- சிறுகதைத் தொகுப்புகள்
- காளிதரிசனம்
- கட்டுரை
- தீனபந்து ஆண்ட்ரூஸ்
- பொழுது போக்கு
- மொழி வளர்ச்சி
- ஆஹா ஊஹு
- வீடும் வண்டியும்
- புகழ்ச்செல்வர்
- எப்படி எழுதினேன் ?
- சந்தனக் காவடி
- நொண்டிக் கிளி
- மஞ்சள் துணி
- விசைவாத்து
- புதுமைக்கவி பாரதியார்
- தலைவர் ஜவாஹர்
- எழுத்தும் எழுத்தாளரும்
- இது என்ன உலகம் ?
- வளர்ச்சியும் வாழ்வும்
- யோசிக்கும் வேளையில்
- கோயரிங்

மொழிபெயர்ப்பு

- கூண்டுக்கிளி (மூலம்: ஹரீந்திரநாத் சட்டோபாத்யாய)
- புது நாள் (மூலம்: மிகைல் ஜோஷென்கோ)
- காந்தி வாழ்க்கை (மூலம்: லூயிஸ் பிஷர்)
- ஒரே உலகம் (மூலம்: வெண்டல் வில்கீ)
- அரசியல் நிர்ணய சபை (நேரு - உரை)
- அட்லாண்டிக் சாசனம் (கட்டுரை)
- லெனின் சரித்திரக் கதைகள்
- குமாயுன் புலிகள் (மூலம்: Man-Eaters of Kumaon, Jim Corbett)
- குழந்தைகள் அறிவு (மூலம் லியோ டால்ஸ்டாய்)

குழந்தை இலக்கியம்

- ரோஜா பெண் (தழுவல் கதைகள்)
- பாப்பாவுக்குக் காந்தி (கட்டுரை)
- வண்ணாத்திப்பூச்சி
- ஆசிய ஜோதி ஜவஹர்
- அற்புதப் பெண்
- பாப்பாவுக்குப் பாரதி (கட்டுரை)
- பாப்பாவுக்குக் காந்தி கதைகள்
- சமர்த்து மைனா
- ரோஜாப்பெண்

தி.ஜ. ரங்கநாதனின் படைப்புக்களை அவரது மறைவிற்குப் பின் 2007-ல், தமிழக அரசு நாட்டுடைமை ஆக்கியது.

திரு. அ. வில்சன், இதழாசிரியர்

### இறுதிக்காலம்

தி.ஜ.ர. தன் இறுதிக் காலத்தில் மிகவும் வறுமையான சூழலில் வாழ்ந்தார். முதுமையிலும் உழைத்தாக வேண்டும் என்ற குடும்பச் சூழ்நிலை, தி.ஜ.ர.வின் உள்ளத்தையும், உடலையும் வெகுவாகப் பாதித்தது. நெய்வேலியில் தனது மகன்களின் வீட்டில் மாறி மாறி வசித்தார். மறதி நோயாலும் பாதிக்கப்பட்டார்

### மறைவு

தி.ஜ. ரங்கநாதன், அக்டோபர் 19, 1974 அன்று, தனது 73-ம் வயதில் காலமானார்.





### நன்றி

காலச்சுவடு
https://tamil.wiki/wiki

# நாளை நமதே

## தயக்கம்

## மிகப்பெரிய தடை.

## அது எத்தனை திறமையையும்

## தன் சிறிய நூலில்

## கட்டிவிடும்.

அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

அகமும் தமிழே

முதலும் தமிழே

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில,

அகர முதல செய்திக்குழு
அகர முதல இலக்கியப் பேரவை
அகர முதல கல்விக்குழு
சிவம் அறக்கட்டளை

தொடர்பிற்கு :

9597887847
8870884969



# அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa
www.aagaramuthala.com
aagaramuthala@gmail.com